அ.வ.எண்.5/2022 நாள்: 23.02.2026

வா.சா.1 திரு. கமால்பாட்சா

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1.தாவா சொத்து எனது தகப்பனாருக்கு பூர்வீக சொத்து என்று எனது பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்குரை தயார் செய்ய எனது வழக்கறிஞருக்கு தகவல் சொன்னது யார் என்றால் நான் தான் சொன்னேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலும் பூர்வீக சொத்து என்று தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனாருடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பாவின் அப்பா மற்றும் அம்மா பெயர் என்ன என்றால் அப்பாவின் அப்பா பெயர் முகம்மது உசேன் என்று அழைப்பார்கள் ஆனால் அவர் பெயர் முகம்மது ஷா ராவுத்தர். எனது அப்பாவின் அம்மா பெயர் தெரியாது.

2. முகம்மது ஷா ராவுத்தருக்கு எனது அப்பா எத்தனையாவது குழந்தை என்றால் எனக்கு தெரியாது கடைசி பிள்ளை என்று சொல்வார்கள். எனது அப்பாவின் உடன்பிறந்த மூத்த சகோதரர் அப்துல் மஜித் என்பவர் தான் பிரதிவாதியின் மாமனார் என்றால் சரிதான். வழக்கில் பிரதிவாதி என்ன கட்சி செய்கிறார் என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. பிரதிவாதியின் கணவர் பக்கீர் முகம்மது என்பவரின் தகப்பனார் தான் அப்துல் மஜித் என்றால் சரிதான். பிரதிவாதி எதிர்வழக்குரையுடன் வம்சாவழிபட்டியல் தாக்கல் செய்திருந்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. எனது தகப்பனாரின் உடன் மூத்த சகோதரர் பெயர் அப்துல் ரகுமான் என்றால் எனக்கு தெரியாது.

3. மேற்படி அப்துல் ரகுமான் மனைவி ஜொகராபிவீ என்றால் எனக்கு தெரியாது. அப்துல் ரகுமான் ஜொகராபிவீ தம்பதியருக்கு 3 குழந்தைகள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு எனது தகப்பனார் பெயரில் கிரைய ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து எனது தகப்பனாருக்கு சொந்தமானது என்பதை நிரூபிக்க உரிமைமூல ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தற்போது எந்த இடத்தில் குடியிருக்கிறேன் என்றால் வழக்கு சொத்து அமைந்துள்ள இடத்திற்கு அருகில் உள்ள அபுபக்கர் தெருவில், கதவு எண்.27–ல் குடியிருக்கிறேன். நான் குடியிருக்கும் கதவு எண்.27 சொந்த இடமா என்றால் நான் கிரையம் வாங்கிய இடம் ஆகும்.

4. நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் இடத்திற்கான கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். (மேற்படி கிரைய ஆவணம் வழக்கு சொத்திற்கு தொடர்பற்றது என வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது). நான் கிரையம் வாங்கிய கதவு எண்.27 ல் உள்ள சொத்திற்கு எனது பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். நான் கிரையம் வாங்கிய பிறகுதான் பட்டா எனக்கு வழங்கப்பட்டது என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். அதற்கு முன்புவரை எனக்கு கிரையம் கொடுத்தவரின் பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எனது தகப்பனார் பெயரில் பட்டா மட்டும் கொடுக்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

5. எனது தகப்பனாருக்கு கொடுக்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் தான் வழக்கு சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று கூறுகிறேன் என்றால் சரிதான். அதன் அடிப்படையில்தான் நான் தாவா சொத்திற்கு உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் மூல பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றும், யார் கிரையம் வாங்கினார் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

S.d/ Kamal Batcha

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.23 14:55:42 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU